DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No: CC.No.78/2023**

**prosecution witness: PW-4**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**A1 present. A2 absent. Petition filed and allowed.**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ஜீவரத்தினம் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

<u>22.01.2025</u>

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது ஏர்வாடி தர்கா காவல்நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.06.2022 ம் தேதி நான் மண்டபம் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.வேலு என்பவர் பதிவு செய்து வைத்திருந்த நிலைய குற்ற எண்.130/2022 ஐ எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தேதியில் 21.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான மண்டபம் கேம்ப் பஸ் ஸ்டாண்ட் கொடிக்கம்பம் அருகில் சாட்சிகள் தங்கசாமி, கீதன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை டார்ச்லைட் உதவியுடன் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும்.**

பின்பு சாட்சிகள் ஈஸ்வரன், விஜயக்குமார், வசந்தி, முருகன், தங்கசாமி, கீதன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

01.07.2022 ம் தேதி 19.00 மணிக்கு மண்டபம் கேம்ப் பஸ் நிறுத்தம் அருகே வைத்து இவ்வழக்கின் எதிரிகள் சக்தி (எ) சக்திவேல், சரவணன் (எ) சரவணக்குமார் ஆகியோர்களை வழக்கின் தன்மையை எடுத்துக்கூறி கைது செய்து 19.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நிலையப்பிணையில் விடுவித்தேன்.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.01.22 17:05:55 +0530

06.08.2022ம் தேதி இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவர் சீனிவாசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். அந்த **காயச்சான்று அ.சா.ஆ.6** ஆகும்.

இவ்வழக்கில் காயச்சான்று அடிப்படையில் 06.08.2022ம் தேதி சட்டப்பிரிவை 294(b), 323, 324, 506(ii) இதசவிலிருந்து பிரிவுகள். 294(b), 323, 326, 506(ii) இதச ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7** ஆகும்.

பின்பு அன்றைய தேதியிலேயே எதிரிகள் மீது பிரிவுகள். 294(b), 323, 326, 506(ii) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

வழக்கு பறறிய விபரங்கள் அனைத்தும் சாட்சி 2 விஜயக்குமார் என்பவர் சொல்லியதாக வழக்கு என்றால் சரிதான். மருத்துவர் எனது விசாரணையில் ஒரு நபர் தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு சான்றுபொருட்களாக கல் மற்றும் கட்டை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். உண்மையில் சம்பவம் நடைபெற்றிருந்தால் கல்லை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்பேன் என்றால் சரியல்ல. இருநபர்கள் கட்டையால் தாக்கியிருந்தார்கள் என்று சொன்னால் தவறு என்றால் சரியல்ல.

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த 3 நாள் கழித்துதான் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 முதல் 3 சாட்சிகள் மற்றும் சம்பவ சாட்சிகள் புகார்தாரர் குடியிருக்கும் பகுதியைச் சார்ந்தவர்கள் மற்றும் உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் உள்ளவர்களை இந்த வழக்கில் யாரையும் சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் உள்ளவர்களை இந்த வழக்கில் விசாரித்தால்தான் வழக்கின் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல. எதிரி சக்கி வலது கை இல்லாத மாற்றுத்திறனாளி என்றால் சரிதான். அவர் ஓங்கி அடித்து காயம் ஏற்படுத்துவதற்கு வாய்பில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே எதிரிகள் புகார்தாரர் இருக்கும் பகுதியில் மதுபாட்டில்கள்விற்பதாக மண்டபம் காவல்நிலையத்திலும், உயர் அதிகாரிகளிடமும்புகார் கொடுத்ததன் அடிப்படையிலும் எதிரிகள் குடியிருக்கும் பகுதிக்கு புகார்தாரர்தரப்பினர் சென்று எதிரி ஊனமுற்ற நபரான சக்திவேலை தாக்கிவிட்டு அந்த பகுதியில் உள்ள மக்கள் சத்தம் போடவும் வேகமாக தப்பித்து ஓடி வரும்போது போஸ்ட் மரத்தில் மோதி மேற்பட்ட காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எந்த சாட்சிகளையும் முறையாக விசாரிக்காமலும், பார்வை மகஜர், வரைபடம் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.01.22 17:06:00 +0530